தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 16 மடல் 6 ஜுன் – 2016 ₹1.00

## இந்திய வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் கூட்டமைப்பின் சந்திப்பு



இந்திய வேளாண்மைப் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு நிதியுதவியிலான “தொழில்கல்விக்கான தேசிய வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறைகளை நிலைப்படுத்துதல்” என்ற தலைப்பில் 11ஆவது தேசியக் கலந்தாய்வரங்கம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் 28.05.2016 மற்றும் 29.05.2016ஆம் தேதிகளில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கலந்தாய்வரங்கில் பங்கேற்று, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இருந்து பங்கேற்ற அனைத்துத் துணைவேந்தர்களையும் வரவேற்றார். புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத் தலைமை இயக்குநர் (கல்வி) முனைவர் நரேந்திர சிங் ரத்தோர் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்து, இரண்டாம் பசுமைப் புரட்சியின் தேவையைத் தமது துவக்கவுரையில் வலியுறுத்தினார். இந்திய வேளாண்மைப் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் காந்திநகர், காமதேனு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் எம்.சி. வார்ஷ்நேயா அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். இந்திய வேளாண்மைப் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பின் செயலாளர் மற்றும் ஆனந்த் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் என்.சி. படேல் அவர்கள் தமது அறிமுக உரையில் நாட்டிலேயே வேளாண்மை மற்றும் அதன் சார்புத் துறையில் பல்தொழில்நுட்பப் பயிற்சியைத் துவக்கிய முதல் மாநிலம் குஜராத் என்று குறிப்பிட்டார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தொழில் கல்விக்கான வேளாண் கல்வி, தொழில் கல்வியில் ஒருங்கிணைந்த திறன் மேம்பாடு மற்றும் பல்தொழில்நுட்பப் பயிற்சிகள், வேலைவாய்ப்பை அதிகப்படுத்தலில் கால்நடை, கோழி மற்றும் மீன்வளத் துறைகளின் பங்களிப்பு, தொழில்கல்விக்கான வேளாண் ஆராய்ச்சியை முன்னெடுத்தல், தொழில் கல்வியின் வேளாண் விரிவாக்கத்தின் பங்கு குறித்து நடைபெற்ற ஐந்து தொழில்நுட்ப அமர்வுகளில் பத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பல்வேறு மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களின் 25 துணைவேந்தர்கள் கலந்தாய்வரங்கில் பங்கேற்று, வேளாண்மை மற்றும் அதன் சார்புத் துறைகளில் தொழில் கல்வியை வலுப்படுத்த, நடைமுறைப்படுத்தத் தக்க பரிந்துரைகள் மற்றும் கொள்கைகளை எடுத்துரைத்தனர்.

## அவசர சிகிச்சைப் பிரிவு துவக்கம்



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் புதிதாகக் கட்டப்பட்ட “அவசர சிகிச்சைப் பிரிவை” புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத் தலைமை இயக்குநர் (கல்வி) முனைவர் நரேந்திர சிங் ரத்தோர் அவர்கள் 28.05.2016 அன்று துவக்கிவைத்தார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர், பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் , சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன், பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் ஆர். ஜெயபிரகாஷ், பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் சிகிச்சைத் துறைப் பேராசிரியர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத் தலைமை இயக்குநர் அவர்கள் சிகிச்சைத் துறையின் பல்வேறு பிரிவுகளைப் பார்வையிட்டு, பேராசிரியர்கள் மற்றும் செல்லப்பிராணிகள் வளர்ப்போரிடம் கலந்துரையாடினார்.

## இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத் தலைமை இயக்குநர் முதுநிலைப் பட்ட மாணவர்களுடன் சந்திப்பு

முதுநிலைப் பட்ட மாணவர்களுடனான கலந்துரையாடல் கூட்டம் 28.05.2016அன்று சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கலந்துரையாடல் கூட்டத்திற்குத் தலைமை வகித்து, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார். புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத் தலைமை இயக்குநர் (கல்வி) முனைவர் நரேந்திர சிங் ரத்தோர் அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடி, எதிர்காலத்தைச் சிறந்தாக உருவாக்குவதில் உயர் கல்வியின் முக்கியத்துவமும்

அதில் மாணவர்களின் பங்கும் குறித்துக் கருத்துரை வழங்கினார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன், அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் மாணவர் சங்கத் துணைத் தலைவர் முனைவர் எஸ்.என். சிவசெல்வம் மற்றும் பேராசிரியர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### விருந்தினர் இல்லம் – திறப்பு விழா



“கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளம்” குறித்த உயிர்த் தொழில்நுட்பத் துறை – பல்கலைக்கழகக் கூட்டிணைவுத் திட்டத்தின்கீழ் புதிய விருந்தினர் இல்லம், பல்கலைக்கழகத்தின் மாதவரம் பால்பண்ணை வளாகத்தில் கட்டப்பட்டுள்ளது. புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத் தலைமை இயக்குநர் (கால்நடை அறிவியல்) முனைவர் எச். ரஹ்மான் அவர்கள் விருந்தினர் இல்லத்தை 27.05.2016அன்று திறந்துவைத்தார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர், இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் முனைவர் ஆர்.கே. சிங், உயிர்த்தொழில்நுட்பத் துறையின் ஆலோசகர் முனைவர் எஸ்.ஆர். ராவ் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### குறும்படம் வெளியீடு



“கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளம்” குறித்த உயிர்த் தொழில்நுட்பத் துறை – பல்கலைக்கழகக் கூட்டிணைவுத் திட்டத்தின்கீழ், பல்கலைக்கழகத்தின் மைய ஆய்வகக் கட்டடத்தின் தரைத் தளத்தில் ஜி.எல்.பி சுத்த அறை ஆய்வகம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சுத்தஅறை பல்வேறு இயக்கு முறைகளுடன் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் முனைவர் ஆர்.கே. சிங் அவர்கள் குறும்படத்தை 27.05.2016அன்று வெளியிட்டார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத் தலைமை இயக்குநர் (கால்நடை அறிவியல்) முனைவர் எச். ரஹ்மான், உயிர்த்தொழில்நுட்பத் துறையின் ஆலோசகர் முனைவர் எஸ்.ஆர். ராவ், ஐதராபாத் இந்தியன் இம்னோலாஜிகல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஆனந்த் குமார் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### கால்நடைப் பசுந்தீவன உற்பத்திப் பிரிவைத் துணைவேந்தர் பார்வையிடல்

“வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் கால்நடைப் பசுந்தீவன உற்பத்தி” என்ற திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டம், நெமிலி ஒன்றியத்தில் உள்ள கீழ்வீதி கிராமத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் கால்நடைப் பசுந்தீவன உற்பத்திப் பிரிவைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 25.05.2016அன்று பார்வையிட்டு ஆய்வுசெய்தார். திட்டத்தின் ‘ஆ’ மற்றும் ‘இ’ பிரிவுகளில் பயிரிடப்பட்ட கோ.சி.என்–4, கோ.சி.என்–5, கலப்பின நேப்பியர், டெஸ்மாந்தஸ் மற்றும் கோ.எப்.எஸ்–29 ஆகிய கால்நடைத் தீவனப் பயிர்களைப் பார்வையிட்ட துணைவேந்தர் அவர்கள் முக்கியக் குறிப்பாணைகளை வழங்கினார். திட்டத்தின் இணை முதன்மை ஆராய்ச்சியாளர்களான உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ச. சரஸ்வதி, உதவிப் பேராசிரியர் முனைவர் பா. ராஜேஷ் குமார், வேலூர், நெம்மேலி ஒன்றியம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் உதவிப் பொறியாளர் திரு.எம். தியாகராஜன், கீழ்வீதி ஊராட்சித் தலைவர் திரு. ஏ. சிவகாமி நாதன் மற்றும் திட்டத்தின் பண்ணை உதவியாளர் திரு. எஸ். ஜானகி ராமன் ஆகியோர் இந்நிகழ்வில் உடன் இருந்தனர்.

### தேசியப் பேரிடர் படை அலுவலர்களுக்கான பயிற்சி



“விலங்குகளுக்கான அவசரக்கால மேலாண்மை” என்ற தலைப்பிலான தேசியப் பயிற்சி, தேசியப் பேரிடர் படை அலுவலர்களுக்காக 09.05.2016 முதல் 14.05.2016 வரை சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டது. பயிற்சியைச் சென்னை கால்நடை மருத்துவக்கல்லூரியின் கால்நடைப் பேரிடர் அவசர உதவிக்குழு, புதுதில்லி தேசியப் பேரிடர் படை, புதுதில்லி கொள்கை முன்னோக்கு நிறுவனம், புதுதில்லி உலக விலங்குப் பாதுகாப்பு அமைப்பு ஆகியவை இணைந்து நடத்தின. தேசியப் பேரிடர் நிர்வாக ஆணையத்தின் முன்னாள் உறுப்பினர் மற்றும் புதுதில்லி கொள்கை முன்னோக்கு நிறுவனத்தின் துணைத் தலைவர் திரு. கே.எம். சிங் இ.கா.ப. அவர்கள் பயிற்சியைத் துவக்கி வைத்தார். இந்திய விலங்கு நல வாரியத்தின் துணைத் தலைவர் முனைவர் சின்னி கிருஷ்ணா அவர்கள் முக்கிய உரையாற்றினார். புதுதில்லி, உலக விலங்குப் பாதுகாப்பு அமைப்பின் தேசிய இயக்குநர் திரு. கஜேந்தர் கே. சர்மா அவர்கள் உரையாற்றினார்.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். கல்லூரியின் கால்நடைப் பேரிடர் அவசர உதவிக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பெரு. மதியழகன் அவர்கள் கல்லூரியின் கால்நடைப் பேரிடர் அவசர உதவிக்குழுவின் செயல்பாடுகளை எடுத்துரைத்தார். துணை ஒருங்கிணைப்பாளர் முனைவர் பாலகங்காதர திலகர் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். புதுதில்லி உலக விலங்குப் பாதுகாப்பு அமைப்பின் திட்ட மேலாளர் திரு. ஆன்சன் தம்பி பிரேம் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினர். பயிற்சியில் இந்தியாவின் தேசியப் பேரிடர் படைப்பிரிவினைச் சார்ந்த 36 வீரர்கள் பங்கேற்றனர்.

### மரபுசார் மூலிகைச் சிகிச்சை முறைகள் குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சி




“தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்த மரபுசார் மூலிகைப் பொருட்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத் திட்டத்தின்”மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளில் ஒன்றாக “மரபுசார் மூலிகைச் சிகிச்சை முறைகள்” குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சி, ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 05.05.2016 அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார். தமிழ்நாடு திட்டக்குழுவின் வேளாண் கொள்கை மற்றும் திட்டப்பிரிவின் தலைவர் முனைவர் கே.ஆர். ஜகன் மோகன், பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். தஞ்சாவூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ந. புண்ணியமூர்த்தி அவர்கள் திட்டம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல், ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களின் மருந்தியல் துறை மற்றும் இதர துறைகளின் பேராசிரியர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### ஆராய்ச்சி மாணவர்களுக்கான பயிற்சி

கால்நடை நலக்கல்வி மையத்தின் கீழ் இயங்கும் ஆய்வக விலங்கின மருத்துவத்துறையின் சார்பில் “ஆராய்ச்சி மாணவர்களுக்கான, ஆய்வக விலங்கினங்களைக் கையாளுதல் மற்றும் மேலாண்மை” எனும் தலைப்பிலான பயிற்சி வகுப்பு 25.05.2016 முதல் 27.05.2016 வரை நடத்தப்பட்டது. ஆய்வக விலங்கினங்களை அறிவியல் பூர்வமாகவும், நன்னெறிகளுக்குட்பட்டும் கையாளுவதற்கான வழிமுறைகள் இதில் பயிற்றுவிக்கப்பட்டன. பயிற்சி வகுப்பு, விரிவுரைகள் மட்டுமன்றி ஆய்வக விலங்கினங்களைக் கையாளுதல், மயக்க மருந்தளித்தல், ரத்தமாதிரி சேகரித்தல் மற்றும் விடய ஆய்வு போன்றவற்றைப் பயிற்சி பெறுபவர்கள் தாமே கைப்பட செய்து அறிந்துகொள்ளுமாறு நிகழ்த்தப்பட்டது. கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களிலிருந்து 12 ஆராய்ச்சியாளர்கள் இதில் பயிற்சி பெற்றனர். பயிற்சியின் முடிவில் பல்கலைக்கழகத்தின் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் பி.ஐ. கணேசன் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

### இராணுவ அலுவலர்களுக்குப் பயிற்சி

பல்கலைக்கழகத்திற்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக “செல்லப் பிராணி மற்றும் பண்ணை விலங்குகள் வளர்ப்பில் இமேஜிங் மற்றும் எண்டோஸ்கோபியின் கொள்கை மற்றும் பயிற்சிகள்” குறித்த 21நாள் பயிற்சி, பல்கலைக்கழகத்தின் சிகிச்சையியல் இயக்குநரகம்மூலம் 25.04.2016 முதல் 15.05.2016வரை நடத்தப்பட்டது. இந்திய ராணுவ கால்நடை மருத்துவச் சேவைப்பிரிவின் நான்கு இராணுவ அலுவலர்கள் பயிற்சியில் பங்கேற்றனர். பண்ணை மற்றும் செல்லப் பிராணிகள் தொடர்பான செய்முறைப் பயிற்சி, விரிவுரைகள் மற்றும் நோய் கண்டறிதல் அல்ட்ரா சவுண்ட், இதயத்துடிப்பு பதிவு, இரப்பை, நுரையீரல், மூக்கு, காது, மடிக்காம்பு, மூட்டு, வயிற்று இனப்பெருக்கச் சோதனை உறுப்புகள் ஆகியவற்றின் எண்டோஸ்கோப் ஊடுகதிரியல் சோதனை ஆகியவற்றில் செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்பட்டன. பயிற்சியின் நிறைவு விழாவில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் பங்கேற்றுப் பயிற்சியாளர்களைப் பாராட்டினார். சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் ஆர். ஜெயபிரகாஷ் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

### பயிற்சி

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் திருநெல்வேலி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகச் சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிலையத்துடன் இணைந்து “கறவைமாடு வளர்ப்பு” குறித்த ஐந்து நாள் புற வளாகப் பயிற்சி, 02.05.2016முதல் 06.05.2016வரை நடத்தியது. பயிற்சியில் கறவை மாடு வளர்ப்பின் பல்வேறு முறைகள், பராமரிப்பு முறைகள் மற்றும் நோய் மேலாண்மை குறித்த ஐந்து விரிவுரைகள் வழங்கப்பட்டன. மொத்தம் 17 விவசாயிகள் பயிற்சியில் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

### மனநலம் குன்றியவர்களைப் பராமரிப்பவர்களுக்கான பயிற்சி



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் திருநெல்வேலி மாவட்டத்தின் புதுவாழ்வுத் திட்டத்துடன் இணைந்து, புதுவாழ்வுத் திட்டப் பயனாளிகளான

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17
Registration No.TN/TBM/32/2015-17

Posted on 29.06.2016 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 28.06.2016

Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

மனநலம் குன்றியவர்களின் பராமரிப்பாளர்களுக்கு “கறவை மாடு வளர்ப்பும் பசுந்தீவன உற்பத்தியும் ” குறித்த ஒரு நாள் பயிற்சியை மூன்று பிரிவாக 25.05.2016, 26.05.2016 மற்றும் 27.05.2016ஆம் தேதிகளில் நடத்தியது. கறவை மாடு வளர்ப்பின் பல்வேறு முறைகள், பராமரிப்பு முறைகள் மற்றும் பசுந்தீவன உற்பத்தி குறித்த நான்கு விரிவுரைகள் வழங்கப்பட்டன. பயிற்சியில் முறையே 20, 23, மற்றும் 25 பயனாளிகள் பங்கேற்றனர். “கால்நடைத் தீவனத் தயாரிப்பு மற்றும் சிறிய தீவனக் கலவைப் பிரிவை இயக்குதல்” குறித்த ஒரு நாள் பயிற்சி மற்றும் செயல்முறை விளக்கம், திருப்பணிகரிசல்குளத்தில் 03.05.2016அன்று நடத்தப்பட்டது.

### பல்கலைக்கழக முக்கிய நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| **திட்டக்குழுக் கூட்டம்** | : | 05.05.2016 |
| **மருத்துவமனை மேலாண்மைக் குழுக் கூட்டம்** | : | 05.05.2016 |
| **பல்கலைக்கழக அதிகாரிகள் கூட்டம்** | : | 05.05.2016 |

### மரபணுக் கோர்வையை வரிசைப்படுத்தல்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமானது பசு, எருமை, செம்மறி மற்றும் வெள்ளாடுகளைத் தாக்கும் ஜோனீஸ் நோய்க்குக் காரணமான “மைகோபாக்டீரியம் பாரடியுபர்குளோசிஸ்” நுண்ணுயிரியின் முழு மரபணுக் கோர்வை வரிசைப்படுத்தலை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளது. இந்திய அரசின் உயிர்த்தொழில்நுட்பத் துறையின் ஒரு பகுதியாக, அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உயிர்த்தொழில் நுட்பத்துறையின் முனைவர் கே. விஜயராணி, முனைவர் கே.ஜி. திருமுருகன் மற்றும் செல்வி எஸ். புவனேஸ்வரி அடங்கிய குழுவினர் 48, 29,781 பிபி நுண்ணுயிர் மரபணுக் கோர்வையை வரிசைப்படுத்தி, மரபணு வரிசையைக் கையாளத் தக்க சூஷ்மூஊஞ015495 எண் இட்டு மரபணு வங்கிக்கு வழங்கியுள்ளனர். இந்த முழுமையான மரபணுத் தகவல் நோய்க் காரணி குறித்து மிக எளிதாகப் புரிந்துகொள்ளவும், டிஎன்ஏ தொழில்நுட்பத்தை பயன்படுத்திச் சிறந்த தடுப்பு மருந்துகள் உருவாக்கவும் உதவும். பல்கலைக்கழகத்தில் இதுதான் நுண்ணுயிர் நோய்க்காரணியின் முழுமையான மரபணு வரிசைப்படுத்தலில் முதல் பணி ஆகும்.

### பணி ஓய்வு



நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உயிர் வேதியியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஆர். ரவி அவர்கள் 31.05.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 22.05.1956இல் பிறந்த இவர், 36 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியின் நிர்வாக அலுவலர் திரு. ஆர். சுப்ரமணி அவர்கள் 31.05.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 01.05.1958இல் பிறந்த இவர், 32 ஆண்டு பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் அலுவலகத்தின் நிர்வாக அலுவலர் திருமதி ஜி. ராஜேஸ்வரி அவர்கள் 31.05.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 13.05.1958இல் பிறந்த இவர், 33 ஆண்டும் 10 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலத்தின் கண்காணிப்பாளர் திருமதி எஸ். சித்ரா அவர்கள் 31.05.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 04.05.1958இல் பிறந்த இவர், 25 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூலக அறிவியல் துறையின் நூலக உதவியாளர் திரு. என். முருகன் அவர்கள் 31.05.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 03.05.1958இல் பிறந்த இவர், 34 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்



நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஊட்டச்சத்தியல் துறையின் முதுநிலை ஆய்வக உதவியாளர் திரு. கே. சுந்தரம் அவர்கள் 31.05.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 25.05.1956இல் பிறந்த இவர், 34 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல் கோழியின நோய்ப் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தின் ஆய்வக உதவியாளர் திரு. இரா. நாகராஜன் அவர்கள் 31.05.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 20.05.1958இல் பிறந்த இவர், 30 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல் கோழியின நோய்ப் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தின் திறனறி பணியாளர் திரு. இரா. ஜெயராஜ் அவர்கள் 31.05.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 17.05.1956இல் பிறந்த இவர், 29 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.